Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 07 (23 • 11 • 1991) சனிக்கிழமை ஓசை: 278

## தாய்மாருக்குச் சத்துணவு செஞ்சிலுவை ஏற்பாடு

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் யாழ். குடாநாட்டில் உள்ள சகல கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்குச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இலவசமாக பொருள்களைக் கொடுத்துதவ முன் வந்துள்ளது. இவ்வாறு பொருள்களை பெற்றுக் கொள்ளவிரும்புவோர்கள் தங்கள் தங்கள் பிரிவுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்க கிளைக்குழுவினருக்கு விண்ணப்பித்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாமெனயாழ். செஞ்சிலுவைச்சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (14)

# மேலதிக உணவு கப்பல்கள்: தீவக மக்களுக்கு நிவாரணம்

## கொழும்பிலிருந்து அரச அதிபர் அறிவிப்பு

யாழ். குடாநாட்டிற்கு இரண்டு மேலதிக உணவுக் கப்பல்கள் அனுப்ப அரசாங்கம் இணங்கியிருப்பதாகவும், இடம்பெயர்ந்த மக்களுக்கு முகாம்களை அமைப்பதற்கு அனுமதித்திருப்பதாகவும், தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொடர்ந்தும் இலவச உலர் உணவை வழங்க சம்மதித்திருப்பதாகவும் கொழும்பிலிருந்து யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைத்த செய்தியில் தெரிவித்துள்ளார்

யாழ். அரச அதிபரின் தகவலின்படி யாழ் மாவட்டத்திற்கென இரண்டு உணவுக்கப்பல்கள் உணவுப்பொருள்களுடன் விரைவில் வடபகுதிக்கு வந்து சேருமெனவும், இக்கப்பல்களைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், அரசாங்கமும் இணைந்து வாடகைக்கு அமர்த்தியுள்ளதாகவும் தெரிகிறது. அதேவேளை இக்கப்பல்களில் வரும் பொருள்கள் பருத்தித்துறையில் இறக்கப்படுமா? அல்லது காங்கேசன்துறையில் இறக்கப்படுமா? என்பது பற்றி தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இரு வரவுள்ள கப்பல்களுடன் இரு இழுவைப்படகுகளும் அனுப்பிவைக்கப்படுமென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விழுவைப்படகுகள் இங்கு வந்துசேர்ந்ததும் பொருள்களை இறக்கும்வேலைகள் துரிதப்படுத்தப்படும் எனவும், இறக்கும் வேலைகள் 50 சதவீதம் விரைவுபடுத்தப்படுமெனவும் யாழ். செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

தீவகமக்களுக்கு நிவாரணம்

அரச அதிபரின் செய்தியில் மேலும்

தீவகப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொடர்ந்தும் சில வாரங்களு

(6ஆம் பக்கம் பார்க்க)

## கடல் பாதுகாப்பு வலயம்?

## கொழும்பில் மாநாடு

[யாழ்ப்பாணம்]


வடபகுதியில் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக விசேட மாநாடு ஒன்று நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் வடபகுதியின் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் வேறும் சில அத்தியாவசிய சேவைகள் தொடர்பாகவும் இம் மாநாட்டில் ஆராயப்பட இருப்பதாகக் கூறப்படுகின்றது.

கூட்டுப்படைகளின் உயர் அதிகாரிகள், பிரதம மந்திரி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காவல்துறை அணிவகுப்பை தலைவர் பிரபா ஏற்கிறார்



கடந்த 19ஆம் திகதி தமிழீழ காவற்துறையினரின் அணி வகுப்பைத் தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொள்ளும் காட்சி. தலைவருடன் காவற்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், தளபதிகள் சொர்ணம், ஜெயம ஆகியோரும் காணப்படுகின்றனர்.



பெறவுள்ளது.
வடபகுதிக்கு விஜயம் மேற்

அறிக்கை தொடர்பாகவும் வேறும் சில அதியாவசிய

கூட்டுப்படைகளின் உயர் அதிகாரிகள், பிரதம மந்திரி
(3 ஆம் பக்கம் பார்க்க)

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொடர்ந்தும் சில வாரங்களு
(6 ஆம் பக்கம் பார்க்க)



காவற்துறை பெண் உறுப்பினரின் அணியை தலைவர் பார்வையிடுகிறார்.

# போராளிகள் - காவற்துறை இணைந்து

# யாழ். நகரில் அணி நடை

## கட்டப்பராயில் மின் ஒளி அலங்காரம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று விடுதலைப்போராளிகளும் காவல்துறையினரும் இணைந்து பெரும் அணிவகுப்பொன்றை நடாத்தினர்.

நேற்று நண்பகல் 2 மணியளவில் யாழ் செயலகம் முன்பாக ஆரம்பித்த மேற்படி அணிநடை கண்டிவீதி பிரதான வீதியூடாகச் சென்று பழைய பூங்கா வீதிவழியாக மீண்டும் செயலகம் முன்பாக வந்தடைந்தது.

மாவீரர் வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று யாழ். நகரம் மிக அலங்கார மயமாகக் காட்சியளித்தது.

மாவீரர்களை நினைவுபடுத்தும் கூட்டங்கள், கண்காட்சிகள் நடைபெற்றன. விளையாட்டு மைதானங்கள் சிரமதானம் மூலம் சீரமைக்கப்பட்டன. மாவீரர்களின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்பட்டன.

சந்திகளில் ஒலிபரப்பிகள் அமைக்கப்பட்டு புரட்சிக் கானங்கள் ஒலிபரப்பப்பட்டன.

குறிப்பாகக்கட்டைப்பிராய் பகுதியில் வீதிகளெங்கும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவுப் பொழுது
(3 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்துவந்தஇராணுவம்மீது புலிகள் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாமாங்கேணி, பனிச்சங்கேணி, வாகரை ஆகிய சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதனை தொடர்ந்து அந்தந்த இடங்களிலேயே தரித்து நின்ற இராணுவத்தினர் பொது மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதே வேளை வொட்டரீஸ்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'பிரேமதாசா ஒவ் சிறிலங்கா' நேற்று வெளியீடு

(கொழும்பு)

பிரேமதாசா ஒவ் சிறிலங்கா ஏ பொலிற்றிக்ஸ் பயோகிறபி என்னும் ஆங்கில நூலொன்று நேற்று ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் வெளியிடப்பட்டது. சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனால் எழுதப்பட்ட இப்புத்தகத்தின் முதற் பிரதி பிரதமர் டி. பி. விஜயதுங்காவினால் வெளியிடப்பட்டது. இலங்கை-இந்தியப் போரவையினர் இப்புத்
(3 ஆம் பக்கம்பார்க்க)



காவற்துறை ஆண் உறுப்பினர்கள் அணியை தலைவர் பார்வையிடும் காட்சி.

# தென்மராட்சி கரையோரப் பகுதியில் அதிகாலையில் விமானகுண்டு வீச்சு

## மீன்பிடி வள்ளங்கள் சேதம்; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கச்சாய், கிளாலி பகுதியில் நேற்றுஅதிகாலைபாரியகுண்டு வீச்சு தாக்குதல் இடம் பெற்றது. கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர் வள்ளங்கள் நாசமாயின ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலைஆறுமணியளவில் சாவகச்சேரி,கச்சாய், கிளாலி பகுதியில் நான்கு விமானங்கள் திடீர் குண்டு வீச்சு நடாத்தின. தொடர்ச்சியாக பல குண்டுகள் வீசப்பட்டன அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டு வட்டமிட்டு பீப்பாக் குண்டுகளை உருட்டி வீழ்த்தியது. மேலும் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் இடைவிடாது குண்டுவீச்சுகளை நடாத்தின.

கடற்கரை பகுதியை அண்டியதாக இருந்ததனால்
(3 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

கப்டன் பிரபா

வவுனியா மாவட்டத்தில் கடந்த பதின்மூன்றாம் திகதி
(6 ஆம் பக்கம் பார்க்க)

**இலவசஇணைப்பு**

1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம், நல்லூர் மீட்பு நிதி மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், தீவகம் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த தமிழீழ மீட்பு நிதி கடன் பத்திரதாரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 24. 11. 91 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் கடன் மீளளிக்கப்படும் என தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி விடுத்திருக்கும் பத்திரிகைக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## வரி விளம்பரம்

"நீம் தூபம்"
மழை காலத்துடன் படை எடுத்துள்ள நுளம்புக் கூட்டம் விரண்டு ஓடிட நீம் தூபம் தினமும் புகை யுங்கள் "நீம்" ஓர் வேப்பு தயாரிப்பு. "மிக்க வைத்" (B/3499)

தவறிவிட்டது
22-11-91 காலை 10 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நாவற்குழி அகதிமுகாம் நிவாரண அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நாவற்குழி அகதிமுகாம் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கவும். அட்டையிலுள்ள பெயர்:- பொன்னுத்துரை மதியழகன் (R/1949)

## "குமாரியில்" பதிவுத் தபால்களும் வந்தன

(நச்சமேட்டை)
குமாரி கப்பலில் கொண்டுவரப்பட்ட தபால் பொதிகளில் இம்முறை யாழ்ப்பாணத்திற்கு பதிவு தபால்களும் வந்திருப்பதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் பார்சல் (பைக்கற்றுக்கள்) எதுவும் வரவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (43)

## தங்கக் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)
98 லட்சம் ரூபா பெறுமதியான நூறு தங்கக் கட்டிகள், 450 கைக்கடிகாரங்கள் விமானப் பார்சலில் கடத்த நடந்த முயற்சி கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளினால் முறியடிக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இக் கடத்தல் தொடர்பாக நால்வர் ரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவாளர்கள் நடாத்தும்
தமிழீழ மாவீரர் நாள் விழா
தீவகக் கோட்டம்

இடம்:- யாழ் - புகையிரத நிலைய அரங்கு.

காலம்:- 28-11-1991 சனிக்கிழமை பி.ப 2 மணி

இவ்விழாவில் கூட்டுறவாளர் உரைகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

தீவக பல.நோ.கூ. சங்கங்களினதும் தெ.ப.போ.கூ. சங்கங்களினதும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களினதும் பொதுச்சபை உறுப்பினர்கள், இயக்குனர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் அனைவரும் இவ் விழாவில் ஒன்று கூடி 'தமிழீழ மண்ணுக்காக வீரசாதனைகள் புரிந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை' நினைவு கூருவோமாக.

"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

-- தலைவர்
தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியம்.
(R/1945)

மாவீரர் தின விழா
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
பண்டத்தரிப்புப் பிரிவு

இடம்: பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
பண்டத்தரிப்பு
காலம்: 24 - 11 - 91 ஞாயிறு காலை 9-00மணி

நிகழ்ச்சிகள்
1. வரவேற்புரை
2. சிறப்புரை - விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்
3. கவி அரங்கு - த. க நி. ஒ. உறுப்பினர்
4. கலைநிகழ்ச்சிகள் - நடன அரங்கு
இசை அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
த. க. நி. ஒன்றியம்
பண்டத்தரிப்புப் பிரிவு
(R-1946)

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 23





கரும்புலி லெப்.கேணல் போர்க் | 2ஆம் லெப். ஜேசு | நியூட்டன்/ சுரேஷ்

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலையில் வீரச்சாவெய்திய
தருமர் (விஜயநாதன் சத்தியநாதன் - அன்புவழிபுரம், திருக்கோணமலை)
1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமையிழந்த
பில்லா (கனகராசா வின்சன்ற் பெனடிக்ற் - வெற்றிலைக்கேணி)
1987 ஆண்டு முல்லைத்தீவு, தண்ணீரூற்றுப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
லெப். அலன் (முருகேசு உருத்திரமூர்த்தி - செம்மலை, அளம்பில், மணலாறு)
திருக்கோணமலையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்
1989 ஆம் ஆண்டு கிளிநொச்சி திருவையாற்றுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய
கமல்
மண்டானில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய
அல்விஸ்/ நளன் (திருச்செல்வம் - கரவெட்டி)
அம்பாறை, கல்முனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறி

நாலவர் ரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழில் நுட்பத் தராதரப் பத்திரப் பாட நெறி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1991 ஆம் ஆண்டுக்கான கனிஷ்ட தொழில் நுட்ப மதிப்பீட்டு நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது. இதன்படி யாழ்ப்பாணம், வேலணை கோட்டங்களுக்கு நல்லூர் சி. சி. த. க. பாடசாலையிலும் சாவகச்சேரி கோட்டத்திற்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் பருத்தித்துறை கோட்டத்திற்கு யாழ். வேலாயுதம் ம. வி. யும், மருதனாமடம் கோட்டத்தினருக்கு இராமநாதன் கல்லூரியூடாகவும், பண்டத்தரிப்பு கோட்டத்தினருக்கு பண். மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என தொழில் நுட்ப கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (ச)

## உயர் ஜனாதிபதியாக யயகு இளவரசன் சிகனோவ்

(நாம்பென்)


கம்போடியாவில் இளவரசர் நரோத்தம் சிகனோவ் அந்த நாட்டு அரசாங்கத்தின் புதிய உயர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

1993 ஆம் ஆண்டில் அதிகார தேர்தல்கள் நடாத்தப்படும் வரை இளவரசர் இப்பதவிப் பொறுப்பை வகிப்பார். நாம்பென்னில் நேற்று உத்தியோகபூர்வமாக இது அறிவிக்கப்பட்டது.


த. க. நி. ஒன்றியம்
பண்டத்தரிப்புப் பிரிவு

(R-1946)





பனை மரத்தை நினைவுறுத்தும் உறுதி கொண்ட மாவீரர் நினைவாக நிலையான பனங்கன்றை ஒவ்வொருவரும் நடுவோம்.

தமிழன் வளம்
பனையின் வளம்

- "மில்க்வைற்"

(B/3503)



வெளிநாட்டுத் தபால்களை
இன்றே ஒப்படைப்பீர்!
துரித தபால் சேவைக்கு

DHL WORLDWIDE EXPRESS

DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA

(B/3436)


அல்விஸ்/நளன் (திருச்செல்வம் - கரவெட்டி)

அம்பாறை, கல்முனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். செயலக கணக்காளரான தமிழ்ப் பொது மகன்

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப் படையினரின் முகாம் தகர்ப்பின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சா வெய்திய

கரும்புலி லெப். கேணல் போர்க் (மாப்பாணபிள்ளை அரசரத்தினம் - ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை, வவுனியா)

இதே தகர்ப்பின் போது வீரச்சாவு எய்திய

நியூட்டன்/சுரேஷ் (குணசேகரம் ஜெயரட்ணம் - இல 178, இந்திரஜித் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி)

கப்டன் ரசாத்/ரசாக் (சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார் - கிளிநொச்சி)

விஜி (நவரத்தினம் நிக்சன் (மதன்ராஜ்) - கிளிநொச்சி)

லோறன்ஸ் (தபனேஸ்வரன் - பெரியமடு, புளியங்குளம், வவுனியா)

மேஜர் கரன்/வீமன் (நல்லதம்பி நடராசா - செல்வபுரம், வவுனிக்குளம்)

லெப். வர்ணன் (இராசரத்தினம் இராசலிங்கம் - நெட்டாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்)

லெப். கோபு (மரியநாயகம் கிறிஸ்ரிகுமார் - பெரியதம்பனை, வவுனியா)

2ஆம் லெப். குமரன் (பொன்னையா சிவசக்தி - நெடுங்குளம், வவுனியா)

மேஜர் பிரபா (இயாகராசா தேவகிருஷ்ணகுமார் - செட்டிகுளம்)

றஞ்சின் (ச. தமிழ்ச்செல்வன் - பூவரசங்குளம், வவுனியா)

லிங்கராஜ் (சுப்பிரமணியம் கதிர்காமநாதன் - மதகுவைத்தகுளம், வவுனியா)

ஆனந்தராஜ் (நாகராசா தம்பிராசா - ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு)

இம்ரான் (வேலுப்பிள்ளை குணதர்மன் - முத்தரிப்புக்கட்டு, முழங்காவில், மன்னார்)

2ஆம் லெப். யேசு (முருகேசு மகேந்திரன் - அராலிவடக்கு, வட்டுக்கோட்டை)

2ஆம் லெப். தும்பன் (துரைராசா பாலராசா (பாபு) - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்)

கோணேஸ் (சூசைப்பிள்ளை ஜெயசீலன் - பாவற்குளம், வவுனியா)

லெப். றொபேட் (சம்பூரணம் ஜெயசிங்கம் அன்ரன் - முருங்கன்பிட்டி, மன்னார்)

2ஆம் லெப். ரஞ்சன் (சேவியர் செல்வம் - மன்னார்)

கப்டன் எழில் (தர்மலிங்கம் செல்வராஜா - இரத்தினம் பண்ணை, உருத்திரபுரம் கிழக்கு, கிளிநொச்சி)

லெப் தில்லை. (பொன்னுத்துரை பத்மநாதன் - சகாயவீதி, வேப்பங்குளம், மன்னார்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

(B/3508) விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

### சிந்தனைக்கு

விடுதலை வேர்விட ஆரம்பித்ததும்,
வெகுவேகமாக வளர்ந்து,
பெருகிவிரிந்து பரவும்.

— ஜார்ஜ்வாஷிங்டன்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 23-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# உணர்ச்சி பூர்வமான ஆரம்பம்

மாவீரர் நாள் நேற்று முன்தினம் உணர்ச்சி பூர்வமான நிலையில், அதேவேளை மிகவும் சிறப்புற நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமாகியது. காலை 8-00 மணிக்குத் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமான மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் அணி வகுப்புக்கள், கூட்டங்கள், கண்காட்சிகள் என நிகழ்வுகள் விரிந்து சென்றன.

பொருளாதாரமுற்றுகை இராணுவமிரட்டல்கள் என்பனவற்றின் மத்தியிலும் ஆரம்பமான மாவீரர் நாளில் மக்கள் தங்கள் எழுச்சியைக் காட்டத் தவறவில்லை. இது எவ்வளவு பெரிய இடர்களின் மத்தியிலும், மாவீரர்களின் தியாகங்களை மக்கள் மறக்கவில்லை என்பதை வெளிக்காட்டும் நிகழ்வாகும்.

மாவீரர் வார ஆரம்பநாள் அரச விடுமுறை தினமாகும். ஆனால், காரியாலயங்கள், பாடசாலைகள் எங்கும் நடைபெற்ற மாவீரர் தின ஆரம்ப நிகழ்ச்சியில் பெருமளவு அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் பெருமளவு பங்கு கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

மாவீரர் வாரம் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட இடங்களில் அகதி முகாம்கள் முக்கியமானவையாகும். உடமைகளை இழந்து சொந்தக் கிராமத்தில் இருந்து வெளியேறி அகதிமுகாம்களில் வாழும் இந்த மக்கள் தமது துன்ப துயரங்களை மறந்து தமக்காக உயிர் நீத்த மாவீரர்களை நினைவுகூர்வதற்கென தம்மால் இயன்ற, ஆனால், பெரிய அளவினதான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

அகதிமுகாம்கள் ஒவ்வொன்றிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டு மாவீரர் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு மக்கள் அவற்றிற்கு அஞ்சலிசெலுத்தினர் இவர்கள் மாவீரர்களுக்குச் செய்த அஞ்சலியானது தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கான எழுச்சியை எந்தவித சக்தியாலும் தோற்கடித்துவிட முடியாது என்பதன் வெளிப்பாடாக அமைந்தது.

அதேவேளை, சந்திகள் தோறும் பொது மக்கள் வீதி வளைவுகளை அமைத்தும், பந்தல்கள் அமைத்தும் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர். ஒவ்வொரு பந்தல்களும், வளைவுகளும் மாவீரர்களின் வீர காவியங்கள் மக்களினால் மறக்கப்படவில்லை என்பதை நினைவூட்டுபவையாக இருந்தன. அத்தோடு, மாவீரர்களின் உருவப்படங்கள் பந்தல்களில் வைக்கப்பட்டு அவற்றிற்கும் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது இது மக்கள்மனங்களில் தனித்துவமான மாவீரர்கள் பெற்றிருந்த உயர்ந்த இடங்களை வெளிக்காட்டுபவையாக இருந்தன.

இவ்வாறாக மக்கள் மாவீரர் வார முதல் நாளில் வெளிப்படுத்திய உணர்வு அலைகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதும், அதனை வழி நடத்திச் செல்லும் விடுதலைப்புலிகள் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைந்தது. அத்தோடு தமிழ் தேசிய இனத்தின் விடுதலை எழுச்சியை எந்தவித சக்தியாலும் தோற்கடித்துவிட முடியாது என்பதனையும், எவருக்கும் எந்தவித மிரட்டலுக்கும் தமிழ் மக்கள் பணிந்துவிடமாட்டார்கள் என்பதையும் வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் புகைப்படக் கண்காட்சி

தமிழீழ போராட்ட வரலாறும், போராட்டத்தில் வீரச்சாவடைந்த 3,500 மாவீரர்களினதும் விபரங்கள் அடங்கிய புகைப்படக் கண்காட்சி நேற்று காலை 10.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆரம்பமானது. கண்காட்சியை யாழ் மாவட்டத்தளபதி செந்தாளன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இக்கண்காட்சியானது மாவீரர்நாள் வரை (27-11-91) காலை 9 00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

# மாவீரர் வாரம் 1991 மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

[நமது நிருபர்]

மாவீரர் வார மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளன.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் மாவீரர் நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் உரைகளும் அதனைத் தொடர்ந்து நாடகங்களும் இடம் பெறுகின்றன.

வலிகாமம்:- கோப்பாய் நவகிரி மாசார் பாடசாலையில் மாலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை சேர்ந்த இளம்பருதி, நெடுங்கீரன், ஜோசா ஆகியோர் உரையாற்றுகின்றனர். அதனைத் தொடர்ந்து "பாசறையைத் தேடும் வீரர்கள்" எனும் நாட்டிய நாடகம் இடம் பெறவுள்ளது.

தெல்லிப்பளை:- பன்னாலையில் மாலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த தேவர், செல்வம், வெண்ணிலா, சாம்பவி ஆகியோரின் உரை இடம் பெறும். அதனைத் தொடர்ந்து 'சந்தனக்காடு' எனும் நாடகம் இடம் பெறவுள்ளது.

சங்கானை:- வட்டு திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த தினேஷ், சண்முகநாதபிள்ளை இளநிலா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். அத்துடன் கலாலயம் 'நாட்டிய நாடகமும்' இடம்பெறவுள்ளது

தென்மராட்சி:- வரணி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த மூர்த்தி, கடாபி மாவீரர், தமிழ்ச்செல்வி ஆகியோரின் உரை இடம் பெறும். தொடர்ந்து "மலரும் தமிழீழம்" எனும் நாடகம் இடம்பெறவுள்ளது.

புலோப்பளை:- கல்விமனேர்ச்சிக் கழகத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பரா, எழிலரசன், சந்திரிகா ஆகியோர் உரையாற்றவுள்ளனர் இறுதியாக "3காவலர்கள்" எனும் நாடகம் இடம்பெறும்.

வடமராட்சி:- கரவெட்டி கப்புது அ.த.க. பாடசாலையில் மாலை 7 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை சேர்ந்த வாஞ்சிநாதன், அரசண்ணா, இளவழகி, மதிவதனி ஆகியோர் உரையாற்றவுள்ளனர். இவர்களது உரையைத் தொடர்ந்தும் இசை நாடகம் ஒன்று மேடையேறவுள்ளது. வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. யோகி, நாவண்ணன், ஆர்த்தி ஆகியோர் உரையாற்றுவர். அதனைத் தொடர்ந்து "எப்பொழுது விடியும்" எனும் நாடகம் இடம் பெறும்.

தீவகம்:- யாழ் பாரதி வித்தியாலயத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த மாறன், தயாபரன், கலையரசன், இளவேனில் ஆகியோர் உரையாற்றவுள்ளனர் அதனைத் தொடர்ந்து "கல்லறையும் குன்றுபோலும்" எனும் நாடகம் இடம் பெறவுள்ளது.

மேற்படி நிகழ்ச்சிகளில் அனைத்துத் தமிழீழ மக்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர்.

## முக்கோண வடிவில் மாவீரர் உருவப்படங்கள்

மாவீரர் வாரத்தை ஒட்டி மண்டதீவுப்பகுதியில் முக்கோண வடிவில் அமைக்கப்பட்ட ஆறு அடி உயரமான மாவீரர் உருவப்படங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மண்டதீவு பிரதான சந்தியின் மையப்பகுதியில் ஆறுஅடி உயரத்தில்லெப்டினன்ட்கேணல் திலீபன், மேஜர் பிரசாத் மேஜர் தம்பன் ஆகியோரது உருவப்படங்கள் முக்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை எத்திசையில் சென்றாலும் தெரியக்கூடிய வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இதன் சுற்றுப் பகுதியில் அப்பகுதிகளில் வாழ்ந்து வீரச்சாவடைந்த பல போராளிகளின் உருவப்படங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சந்தியின் நான்கு பகுதிகளிலும் போராட்ட வரலாறுகளைச் சித்தரிக்கும் மாவீரர் வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாதகல் பகுதியில் மாவீரர் வளைவுகளும் அப்பகுதி மாவீரர்களின் உருவப்படங்களும் நிறுவப்பட்டுள்ளன.

பொதுமக்கள் சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் சிறாரவையினரால் வீதிகள் சிரமதானம் மூலம் புனிதப்படுத்தப்படுகின்றன. (ச)

## கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஒன்பது மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சைக்கு துரித ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு யாழ் கல்வித் திணைக்களம் தள்ளப்பட்டிருக்கின்றது.

அடுத்த மாதம் 18ஆம் திகதி நடைபெற இருக்கும் மேற்படி பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை அவசரமாக கொழும்பு பரீட்சைத்திணைக்களத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதால் மேற்படி பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்கள் உடனடியாக தமது கையொப்பங்களை விண்ணப்பங்களில் இடுவதற்காக பாடசாலைக்கு வரும் திங்கட்கிழமை செல்லும்படி யாழ். கல்வித்திணைக்களம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அதிபர்களுக்கும் அவசர பணிப்புரை வழங்கப்பட்டிருக்கின்றது. (ஈ)

பிரேமதாசா

தக வெளியீட்டிற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

சிறிலங்கா ஜனாதிபதியின் முழு வாழ்க்கை விபரங்களையும் எடுத்துக்கூறுவதன் மூலம் இந்நூல் வாசகநேயர்களின் நீண்டகாலத் தேவையைப் பூர்த்திசெய்யுமென்று பிரதமர் டி.பி விஜயதுங்கா இவ்வெளியீட்டு வைபவத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இலங்கை அயல் நாடுகளுடன் கொண்டுள்ள உறவு குறித்தும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது தென்னாசியப்பிராந்திய மக்கள்மத்தியில்இலங்கையைபற்றியும் அதன் தலைமைத்துவம் பற்றியும் நன்கு புரிந்துகொள்வதற்கு இந்த நூல் உதவும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில்இந்நூலின் வெளியீட்டாளர் நரேந்திர குமார், இலங்கை-இந்திய சமிசத் தலைவர் முனி குண்டன் மாலி, யோகேந்திரா துரைசுவாமி, பேராசிரியர் ஷெல்டன் கொடிகாரா, தயான் ஜயதிலக்க ஆகியோரும் உரையாற்றினர்.

இந்நூலின் முதற்பிரதி நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிடம் வெளியீட்டாளர் நரேந்திர குமாரினால் வழங்கப்பட்டது. மேலும் ஒரு பிரதி ஹேமா பிரேமதாசாவிடமும் திரு. நரேந்திரகுமாரினால் வழங்கப்பட்டது.

கடல்

மற்றும் அத்தியாவசிய சேவைகள் பிரிவின் உயர் அதிகாரிகள், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோர் இம் மாநாட்டில் கலந்துகொள்வார்கள். இம் மாநாட்டில் யாழ். குடாக் கடல் பகுதியில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ள வசதியாக கடல் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் பரிசீலிக்கப்படவிருக்கின்றது. கடல் பாதுகாப்பு வலயம் சாத்தியப்படாவிடத்து பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களுக்கு உணவுநிவாரணம் வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. [•]

தென்மராட்சி

அங்கே மீனவர்கள் நிறுத்தி வைத்திருந்த வள்ளங்கள் பெருமளவில் சேதமுற்றன. பல லட்ச ரூபா பெறுமதியான வள்ளங்கள் நொருங்கிப் போயின.

இந்த குண்டு வீச்சில் வா. ஐயாத்துரை (60 வயது) என்பவர் படுகாயமுற்ற நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்ட பாவனையாளர் பாதுகாப்புச் சபையின் பொதுக்கூட்டம் 23ம் திகதி காலை 23 11.91) 9 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா (ஒ. எல். ஆர்) கோவிலில் உள்ள பாடசாலை மண்டபத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் இ இளங்கோவன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. (14)

போராளிகள்

ஒளி மயமாகக் காட்சியளித்தது.

மிக நீண்ட தூரம், ரியூப் மின் விளக்குகள் கட்டப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

இங்கு அமைக்கப்பட்டிருக்கும் தமிழீழ தேச உருவப் படம், வாண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

நேற்றிரவு ஏராளமான பொதுமக்கள் மேற்படி அலங்காரங்களைப் பார்த்துச் சென்றனர்.

பல இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் புகைப்படங்களைக் குடும்பம்குடும்பமாகச் சென்று மக்கள் பார்த்து அம்மாவீரர்களைக் கௌரவித்தனர்.

இம் மாவீரர் வாரத்தில் மாணவர்கள் பலர் இணைந்து உலர் உணவுப் பொருள்களைச் சேகரித்து அகதி மக்களுக்கு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் ஆதரவாளரென தமிழகத்தில் பலர் கைது

(சென்னை)

யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் செல்ல சாந்தன் முயற்சிசெய்து கொண்டிருந்த வேளையிலேயே அவர் தற்கொலை செய்துகொண்டார் என்றும், அவர் தனது முயற்சியில் வெற்றி கண்டிருந்தால் அவர் மீண்டும் தமிழகம் திரும்பி வந்து பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருப்பாரென்றும் விசேட புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாந்தனின் மரணம் விடுதலைப் புலிகளின் சயனைட் கலாசாரத்தை மேலும் அம்பலப்படுத்தியுள்ளதாகவும், சந்தேகநபர்களுக்குப் புகலிடம் வழங்கிய திராவிடக்கழக ஊழியர்கள் பற்றிய தகவல்களையும் வெளிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேநேரம் விடுதலைப்புலிகளுக்கு வெடிமருந்துகளை வழங்குவதற்கு இராமேஸ்வரம் நோக்கிச்சென்றுகொண்டிருந்த தாராபுரத்தைச் சேர்ந்த இளைஞர்களான சண்முகம், செல்லமுத்து ஆகிய இருவரும் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த இருவரும் ரவி என்பவரால் விடுதலைப் புலிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு புலிகளிடம் பயிற்சிபெற்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சோடிக்கரையைச் சேர்ந்த மாணிக்கம் புலிகளிடம்பயிற்சி பெற்றவர்கள்எனக் கூறப்படும் தேசிய புரட்சிகரப் படையைச் சேர்ந்தமதுரைசேகரன், பழனியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி துரைசாமி ஆகியோரும் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தமிழகக்காவல்துறை அறிவித்துள்ளது.

## ருமேனிய தூதர்நாளை விடுதலை?

(புதுடில்லி)

புதுடில்லியில் கடந்த மாதம் ஒன்பதாம் திகதி கடத்திச் செல்லப்பட்ட ருமேனியத் தூதுவர் ராரு நாளை ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்படுவார் என்று பி.ரி.ஐ யின் செய்திக்குறிப்பு ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னிப் பிராந்தியத்தில் மாவீரர் வார நிகழ்ச்சிகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தமிழீழ மாவீரர்வார நிகழ்ச்சிகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

ஒமந்தை, நெலுக்குளம், பூநகரி ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் மாவீரர்தின எழுச்சிக் கூட்டங்களும் நடைபெற்றன.

## தமிழர் குடியிருப்புகளில் முஸ்லிம்கள் குடியேற்றம்

மன்னார் தீவின் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் முஸ்லிம் மக்களை சிறிலங்கா அரசு குடியேற்றி வருகிறது. சிறிலங்கா இராணுவத் தாக்குதலால் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பகுதிகளில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களை குடியேற்றி வருகின்றது.

## மாணவி மீது தாக்குதல் காவல் துறையால் மாணவன் கைது

(யாழ்ப்பாணம்)

மாணவி ஒருவரைத் தாக்கிய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நான்காம் ஆண்டு மாணவர் ஒருவர் தமிழீழ காவற் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாய் மாணவியின் பெற்றோர் தமிழீழக் காவற்துறையில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக காவற்துறை வட்டாரங்களில் தெரிய வருகின்றது.

## ஆசிரியர் ஆண்டு இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் ஆண்டு இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பமாகின்றது. இப்பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருப்பதாக யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (க)

## எறிகணைத் தாக்குதல்

மாவிட்டபுரம், கட்டுவன் பகுதியில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையும், நேற்று முன்தினம் காலையும் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. இத்தாக்குதல்கள் நடைபெறும் போது துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

## மகாதேவன் கடத்தப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாலை நிவாரணத் திட்ட இயக்குநரான மகாதேவன் என்பவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளாரென அறிய வருகின்றது.

## ரோந்து

முகாம், ரம்பைக்குளம் முகாம் ஆகியவற்றிலிருந்து வெளியேறி மதுரங்குளப் பகுதிக்கு வரமுயன்ற இராணுவத்தினர் மீதும் கருவேப்பம் கேணி என்ற இடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர். அத்துடன் இவ்விடத்தில் ஏற்கனவே புதைத்து வைக்கப்பட்டிருந்த இரு கண்ணி வெடிகளும் வெடித்துள்ளன. இதில் இராணுவத்தினருக்கு பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

யன்று நடைபெற்ற நேரடி மோதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 'கப்டன் பிரபா (செல்வரட்ணம் செல்வகுமார் வண்ணாங்குளம் முல்லைத்தீவு) நேற்று வீரச்சாவு எய்தியுள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## பொதுக்கூட்டம்

மாவீரர் வாரத்தையொட்டி நடாத்தப்படும் பொதுக் கூட்டமொன்று இன்று மாலை ஏழு மணிக்கு யாழ் ஆரியாலை பார்வதி மாணிக்கியாலயம் முன்பாக நடைபெறவுள்ளது. இப்பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர்.

## மேலதிக

க்கு இலவச உலர் உணவை வழங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தீவகப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இரண்டு வாரத்திற்கு மட்டுமே இலவச உலர் உணவை வழங்க அரசு முன்னர் அனுமதித்திருந்தது தெரிந்ததே.

அகதி முகாம் அமைக்க முயற்சி

மேலும் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான குடிசைகள் அமைப்பதற்கு ஒரு கோடி ரூபாவை அரசு அனுமதித்துள்ளது.

இதன் மூலம் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உடனடியாக இரண்டாயிரம் குடிசைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

இதற்கு ஏற்ற இடத்தை தெரிவு செய்ய குழு ஒன்று நேற்று சாவகச்சேரிப் பகுதிக்குச் சென்றது. இதுவரை காலமும் வட பகுதியில் முகாம்களை அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்க மறுத்து வந்தது தெரிந்ததே. (ச)

## முல்லையில் ஊரடங்கு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுக்காலை முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்று இந்த அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டிற்குரிய வாகன உத்தரவுப் பத்திரங்கள்; காப்புறுதிப் பத்திரங்கள் ஆகியவை அனைத்தும் வடபகுதிக்கான முகாம்களில் பொலிசாரினாலும், இராணுவத்தினராலும் பரிசோதிக்கப்படும் என்றும்,

வாகனச் சொந்தக்காரர்கள் இந்தப் பத்திரங்களைக் கேட்கும் பொழுது காண்பிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## ஐ.நா. பொதுசெயலாளராக எகிப்திய பூட்டர்ஸ் காலி

(நியூயோர்க்)

ஐ. நா. சபையின் பொதுச்செயலாளராக எகிப்திய பிரதிப் பிரதம மந்திரி பூட்டர்ஸ் காலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஐ நா சபையின் உயர்பதவியை வகிப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவர் ஜனவரி மாதம் முதலாம் திகதி பதவி ஏற்பார். 69 வயதான இவர் 1978 ஆம் ஆண்டு காம்ப்-டேவிட் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் பொழுது முக்கிய பங்கை வகித்தவராவார்.

## தீவக மக்களுக்கு பொது மன்னிப்பாம்

(கொழும்பு)

தமிழ்ப் போராளிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை பொது மன்னிப்பு வழங்க சிறிலங்கா அரசு முன்வந்திருக்கிறது.

பாதுகாப்புப் படைகளின் கட்டுப் பாட்டின் கீழ் தற்போது கொண்டுவரப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறியவர்கள் அனைவருக்கும் இந்தப் பொதுமன்னிப்பு பொருந்துமாம்.

யாழ் தீவுக் கூட்டங்களில் விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்டிருந்த அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்க அரசு முன்வந்திருப்பதாக கொழும்பில் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இச்சலுகையைப்பயன்படுத்த முன்வரும் பொதுமக்களைப்பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அந்த அரச அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## மத். கிழக்கு மாநாடு 2ஆம் கட்டம் வாஷிங்டனில்

மத்திய கிழக்கு அமைதி மாநாட்டின் இரண்டாம் கட்டம் வாஷிங்டனில் நடைபெறவுள்ளது. நவம்பர் நான்காம் திகதி இச்சந்திப்பு நடைபெறும் என எதிர் பார்க்கப்படும் போதிலும் இஸ்ரேலிய அரசு இதுபற்றி இன்னமும் ஊர்ஜிதம் செய்யவில்லை. இஸ்ரேல் தரப்பு இச்சந்திப்பு மத்திய கிழக்குப் பகுதியில் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியதாயினும் பாலஸ்தீனியப் பிரதிநிதி திருமதி ஹனன் அஷ்ராவி வாஷிங்டனிலேயே நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தி வந்தார் என்பது தெரிந்ததே.

இதேவேளை இந்த இரண்டாம் கட்ட சந்திப்பிற்கு முன்பாக இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ஷாமிரும், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

## யாழ். இந்துக் கல்லூரியில் ஓவியக் கண்காட்சி

தமிழீழ மாவீரர் வாரத்தையொட்டி ஓவியக் கண்காட்சி ஒன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. நேற்றுமுன்தினம்காலை இந்த ஓவியக் கண்காட்சியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. யோ. மகேந்திரராசா அவர்கள் திறந்து வைத்தார்.

வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் மத்தியில் உறுதியுடன் விடுதலைப் போராட்டத்திற்கு உந்து சக்தியாக இருக்கும் தென் தமிழீழ மக்களினதும், துணிச்சல் வீரம் இவற்றிற்கு வரைவிலக்கணம் வகுத்து திடமுடன் போராடிவரும் போராளிகளதும் கடந்த கால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வர்ண ஓவியங்களும் தமிழீழப் போராட்டத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கினை எடுத்தியம்பும் சுவரொட்டிகளும், விடுதலைப் போரில் வீரச் சாவடைந்த போராளிகளின் உருவப்படங்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

காலை முதல் இரவு வரை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து பார்வையிட்டுச் சென்றனர். (க)

## கைப்பணிக் கண்காட்சி

நீர்வேலி கிராம மாதர் அபிவிருத்தி முன்னேற்றச்சங்கத்தினால் வாழைநார்கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி 19. 11. 91 அன்று நீர்வேலி பாலர் நிலையத்தில் நடத்தப்பட்டது. பயிற்சியாளர்கள் சிறந்த முறையில் கைப்பணிப் பொருள்களைச்செய்து காட்சிக்கு வைத்திருந்தனர். கண்காட்சி முடிவில் விற்பனையும் பெரியார்களின் ஆசியுரையும் இடம்பெற்றது.


## புகைப்படக் கண்காட்சி

இடம் : கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

காலம் : 21 முதல் 27-11-91 வரை

காலை முதல் மாலை வரை

நுழைவுக்கட்டணம் ; ரூபா 2·00

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்து விளக்கும் வகையிலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்முயிரை ஈந்த 3500 க்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவில் நிறுத்தும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இக் கண்காட்சி.

மேலும் இக் கண்காட்சியில் தமிழீழ மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அவற்றை எதிர்த்து கிளர்ந்தெழுந்த போராட்டங்கள், விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம்கள், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் போன்றவையும், எமது மண்ணுக்காக தம்முயிரை ஈந்த மாவீரர்கள் பற்றிய விபரங்களும் எடுத்து விளக்கப்படுகின்றன.

இக் கண்காட்சியின் நுழைவுக் கட்டணமாக திரட்டப்படும் பணம் தமிழீழத்தில் இடம் பெயர்ந்து அல்லுறும் மக்களின் துயர் துடைப்பிற்கு பயன்படுத்தப் படவுள்ளது.

அனைவரும் திரண்டு வருக. (B/3513)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம்மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.